# அடுக்குத் தொடர்

செய்யுளிலும் வழக்கிலும் அசைநிலைக்கும், விரைவு வெகுளி (ஆத்திரம்) உவகை அச்சம் அவலம் ஆகிய பொருள் நிலைகளை உணர்த்தும் வண்ணமும், யாப்பிலக்கணத்தின்படி அல்லது பொதுவாக இசையை நிறைவு செய்யும் பொருட்டும் ஒரு சொல் இரண்டு, மூன்று, அல்லது நான்கு முறை அடுக்கி வருவது **அடுக்குத்தொடர்** எனப்படும்.[1]

## எடுத்துக்காட்டுகள்

| கரணியம் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|
| அசைநிலை | அன்றே அன்றே |
| விரைவுப்பொருள் | போ போ போ |
| வெகுளி | விடு விடு விடு |
| உவகை | வாருங்கள் வாருங்கள் |
| அச்சம் | தீத்தீத்தீ |
| அவலம் | வீழ்ந்தேன் வீழ்ந்தேன் வீழ்ந்தேன் |
| இசைநிறை | வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே![2] |

செய்யுளிலும் வழக்கிலும் அசைநிலைக்கும், விரைவு வெகுளி (ஆத்திரம்) உவகை அச்சம் அவலம் ஆகிய பொருள் நிலைகளை உணர்த்தும் வண்ணமும், யாப்பிலக்கணத்தின்படி அல்லது பொதுவாக இசையை நிறைவு செய்யும் பொருட்டும் ஒரு சொல் இரண்டு, மூன்று, அல்லது நான்கு முறை அடுக்கி வருவது **அடுக்குத்தொடர்** எனப்படும்.

**இரட்டைக்கிளவி** என்பது இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து ஒரு தன்மைப்பட்டு நின்று, வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவதாகும். இது இரட்டைச் சொல்லாகவே வரும். பிரித்தால் பொருள் தராது. **ரட்டைக்கிளவி** என்பது இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து ஒரு தன்மைப்பட்டு நின்று, வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவதாகும். இது இரட்டைச் சொல்லாகவே வரும். பிரித்தால் பொருள் தராது.

எ.கா:

1. நீர் **சலசல** என ஓடிற்று
2. மரம் **மடமட** என முறிந்தது
3. **கசகச** என வேர்வை
4. **கலகல**ப்பான பேச்சு
5. **கடகட** என சிரித்தான்